திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தமிழிலே தந்தி அடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொன்னார்கள். ஆனால் இந்தியிலே தந்திச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்தியிலே தந்திச் செய்திகள் அனுப்ப மட்டும் ஏற்பாடுகள் செய்திருக்கின்ற மத்திய அரசாங்கம், மற்ற பிராந்திய மொழிகளிலே தந்திச் செய்திகள் அனுப்ப ஏற்பாடுகள் செய்யாமல் இருப்பதற்கு என்ன என்ன காரணங்கள் சொல்கிறார்கள். இந்த விஷயத்தில் மீண்டும் மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போது தந்திகளை வட்டார மொழிகளில் கொடுக்க இயலும். ஆனால் ரோமன் வரிவடிவில் (ஆங்கிலம்) அல்லது தேவநாகரி (இந்தி) வரிவடிவில் தந்திகள் எழுதப்பட வேண்டுமென்ற நடைமுறை உள்ளது. வெவ்வேறு வட்டார மொழிகளுக்காக ஒரு தனி "மோர்ஸ் கோடு" என்னும் தந்திக் குறியீட்டுத் தொகுதியை உருவாக்குவது செயல்முறையில் சாத்தியமல்ல. மேலும் பல்வேறு வட்டார மொழிகளில் டெலிபிரிண்டர் பொறிகளைத் தயாரிப்பதற்குச் செலவு அதிகமாகுமென்பதால், இத் திட்டத்தைச் செயல்படுத்துவது ஆதாயமற்றதாகும். அனைத்திந்தியத் தன்மை கொண்டுள்ள தந்திப் பணிகளில் வட்டார மொழிகளைப் பயன்படுத்தினால் மாநிலங்களுக்கிடையே செய்திகளை அனுப்புதல், வட்டாரமொழிகள் "மோர்ஸ் கோடு" அறிந்துள்ள பணியாளர்கள் தந்திச் செய்திகளை அனுப்புமிடம், தந்திச் செய்திகளைப் பெறுமிடம் ஆகிய இருமுனைகளிலும் கிடைப்பதுபோன்ற ஏனைய பிரச்சினைகள் எழும். எனவே, ஆங்கில வரி வடிவ எழுத்துக்கள், தேவநாகரி வரிவடிவில் எழுத்துக்கள் நீங்கலான பிற வரிவடிவ எழுத்துக்களில் எழுதப்படும் தந்திகளை ஏற்றுக்கொள்வது தற்போது இயலாது என்று மத்திய அரசிடமிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், தமிழிலே தந்தி அடிக்க முடியும் என்றும் அதற்கான 'கோட்' போன்றவற்றையெல்லாம் திருச்சியிலே இருக்கிற அங்கே பணியாற்றக்கூடிய ஒரு ஊழியர் ஒரு புத்தகமாகப் போட்டு அது வெளிவந்திருக்கிறது. அதை அமல் நடத்தச் செய்வதற்கு நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்தும்பொழுது, மீண்டும் அந்தக் கருத்தை வலியுறுத்துவோம்.

Assistance from Agricultural Refinance Corporation

*10 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether this Government has sought the assistance of the Agricultural Refinance Corporation to improve agriculture in Tamil Nadu; and

(b) if so, the details thereof and the allocation of finance, district-war?

1971 அக்டோபர் 21]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) அக்ரிகல்சுரல் ரீபைனான்ஸ் கார்ப்பரேஷன், அதாவது வேளாண்மை மறுநிதிக் கழகத்தினிடம் உதவி பெறும் திட்டங்களும் அக்கழகத்தின் உதவி கோரியுள்ள திட்டங்களும் அடங்கிய விவர அறிக்கை @ ஒன்று இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE: Sir, may I know whether the Government have impressed upon those persons that as far as distribution of the amount is concerned, it would be done equitably all over the State? Also, whether that Corporation have asked this Government that it should be invested in a particular district like Thanjavur district and if so, may I know the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தால், எல்லா மாவட்டங்களுக்கும் உதவி கோரப்பட்டிருக்கின்றது என்பது தெரியும். எல்லா மாவட்டங்களுக்கும் உதவியளித்துத்தான் வருகிறார்கள்.

DR. H. V. HANDE: My question is, whether the Corporahave asked the Government to see that the amount should be spent in a particular fashion?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்த அக்ரிகல்சுரல் ரீபைனான்ஸ் கார்ப்பரேஷன் நிதி வழங்கும் பொழுது ஒரு பார்டிகுலர் பேஷன் அல்ல, அநேக பேஷன்களிலே நிதி வழங்கப்படுகிறது. அதைப்பற்றிய விவரங்கள் எல்லாம் நாற்பது பக்கங்கள் கொண்டதாக இருக்கிறது.

திரு. எம். பரமசிவம்: தலைவர் அவர்களே, வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் அடிப்படையிலே இயங்குகின்ற இந்தத் திட்டம், ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற சில வட்டங்களிலே அமலாக்கப்படாமல் இருக்கின்றன. அப்படியில்லாமல் எல்லா வட்டங்களிலும் அமல் செய்யக்கூடிய வகையில் அதை விரிவு படுத்துகின்ற முயற்சிகளை அரசாங்கம் எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: முயற்சிகள் நடந்து வருகின்றன.

கூட்டுறவுக் கடன்கள்

* 11 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தாண்டு கூட்டுறவுக் கடன்களை தள்ளி வைக்க வேண்டி அரசாங்கம் ரிசர்வு பேங்குக்கு சிபாரிசு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், ரிசர்வு பேங்கு அதற்கு சம்மதித்துள்ளதா?

@ 82-99-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.